**புறொப்பட்டி டெவெலப்மென்ட் பிஎல்சீ மற்றும் அதன் துணைக்கம்பனி - 2021**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

புறொப்பட்டி டெவெலப்மென்ட் பிஎல்சீயினதும் (‘‘கம்பனி’’) கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனியினதும் (‘‘தொகுதி’’) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்று எனக்கு உதவியது.

கம்பனியினதும் தொகுதியினதும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி தொகுதியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தொகுதியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- தொகுதியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் தொகுதி இணங்கியிருந்ததா என்பதும்,

- தொகுதி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- தொகுதியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

**கணக்காய்வு விடயம்**

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 158,260,826 பெறுமதியான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள் இன்னும் பயன்பாட்டில் உள்ளன. அந்தச் சொத்துக்களை கணக்கில் எடுத்துக்கொள்வதற்காக அவற்றின் பயன்தரு ஆயுட்காலத்தை கம்பனி மீள்மதிப்பீடு செய்திருக்கவில்லை அல்லது மீளாய்வு செய்திருக்கவில்லை. விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

| **முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள்** | **தொகைகள் (ரூபா)** |
|---|---|
| பொறி மற்றும் இயந்திரங்கள் (IP இன் கீழ்) | 108,992,778 |
| பொறி மற்றும் இயந்திரங்கள் (PPE இன் கீழ்) | 215,409 |
| மோட்டார் வாகனம் | 21,401,770 |
| அலுவலக உபகரணங்கள் | 627,763 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | 17,531,936 |
| கணனி உபகரணங்கள் | 9,491,170 |
| **மொத்தம்** | **158,260,826** |

**முகாமைத்துவ கருத்துரை**

2012 ஆம் ஆண்டில் SLFRS உடன் இணைவதன் மூலம் பெரும்பாலான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், மீள்மதிப்பீடு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களும் 2018 ஆம் ஆண்டளவில் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ளன. சொத்துக்களை முழுமையாக பெறுமானத்தேய்விடுவதற்கு முன்னர் நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும் என கணக்காய்வாளர்கள் குறிப்பிட்டதால் 2018 ஆம் ஆண்டில் ரூபா 107,996,584.25 தொகையான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட நிலையான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கை

**பரிந்துரை**

இன்னும் பயன்பாட்டில் உள்ள நிலையான சொத்துக்களின் பயன்தரு அயுட்காலத்தை மீள்மதிப்பீடு செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

வெற்றியளிக்கவில்லை. எதிர்காலத்தில் நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் ஆண்டு அடிப்படையில் பொருண்மையின் அடிப்படையில் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 1.5.2 பொருத்தமற்ற பெறுமதி கணிப்பீடு அல்லது மதிப்பீடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| PDL கோபுரக் கட்டிடம் தற்போது 50 ஆண்டுகளுக்கும் மேலாக பெறுமானத்தேய்விடப்பட்டு வருகிறது, இது கட்டிடத்தின் பயன்தரு ஆயுட்காலத்தை குறைவாக காட்டுகின்றது. ஒரு சொத்து அதன் பயன்தரு ஆயட்காலத்தை விட குறைவான காலப்பகுதியில் பெறுமானத்தேய்விடப்படும் போது அதன் பெறுமதி குறைத்து மதிப்பிடப்படும், மேலும் பெறுமானத்தேய்வு செலவினம் நன்மையுடன் சரியாகப் பொருந்தாது, இதன் விளைவாக இலாபம் தவறாகக் குறிப்பிடப்படுகிறது. | 2022 ஆகஸ்ட் மாதத்தில் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திடமிருந்து (CECB) BOC தலைமையகக் கட்டிடத்தின் மீதமுள்ள பயன்தரு ஆயுட்காலம் தொடர்பான அறிக்கையை முகாமைத்துவம் பெற்றுள்ளது. அவர்கள் ‘‘எஞ்சிய சேவை ஆயட்காலத்தின் எதிர்வுகூறல்’’ என பெயரிடப்பட்ட அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர். மேலும் BOC தலைமையக கட்டிடத்தின் பயன்தரு ஆயுட்காலம்/ சேவை ஆயுட்காலம் தற்போதிலிருந்து (2022 ஆம் ஆண்டு) 30 ஆண்டுகளாக இருக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கணக்காய்வாளர்களுடன் (E & Y) கலந்தாலோசித்து, முகாமைத்துவம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களைச் செய்யும். | BOC தலைமையக கட்டிடத்தின் எஞ்சிய சேவை ஆயுட்காலத்தை எதிர்வுகூறுவதன் அடிப்படையில் தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 650 மில்லியன் தொகையான இலாபமொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 474 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. ஆகையால், நிதி விளைவுகளில் ரூபா 176 மில்லியன் தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம், ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் நிதி வருமானம் என்பன முறையே 11.1 சதவீதம், 262.1 சதவீதம் மற்றும் 17.8 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் வரி வருமானம் 36.3 சதவீதத்தால் குறைவடைந்தமை என்பன மீளாய்வாண்டில் நிதி விளைவில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாகும்.

## 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவின விடயங்களின் பகுப்பாய்வு, அதிகரிப்பு அல்லது குறைவு சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | முரண் தொகை அதிகரிப்பு/ (குறைவு) (ரூபா) | முரண் % | முரணிற்கான காரணம் |
|---|---|---|---|
| வருமானம் | 91,560,928 | 11.1 | கொவிட்-19 தொற்றுநோய் தாக்கத்தை கருத்தில் கொண்டு 2020/04/01 முதல் 2020/09/30 வரையான காலப்பகுதிக்கு இலங்கை வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 96,944,202 வாடகைக் கட்டண கழிவு பிரதானமாக 2021 ஆம் ஆண்டில் வழங்கப்படாததன் காரணமாக வருமானம் 11.1 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 27,546,048 | 262.1 | மூலதனச் செலவினங்களுக்கான மீள்நிரப்பலாக இலங்கை வங்கியிடமிருந்து பெறப்பட்ட ரூபா 27,777,778 உட்பட நானாவித வருமானத்தின் அதிகரிப்பு காரணமாக ஏனைய செயற்பாட்டு வருமானம் 262.1 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. |
| நேரடி செலவினங்கள் | 8,518,094 | 6.2 | முக்கியமாக பராமரிப்பு செலவினங்கள் 30.6 சதவீதத்தால் அதிகரித்ததன் காரணமாக நேரடி செலவினங்கள் 6.2 சதவீதத்தால் அதிகரித்துள்ளது, |
| நிதி வருமானம் | 30,848,489 | 17.8 | 2021 ஆம் ஆண்டில் பிரதானமாக மூலதன பிணைகளிலிருந்தான பங்கிலாப வருமானம் ரூபா 37,325,842 ஆல் அதிகரித்ததன் காரணமாக நிதி வருமானம் 17.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. |
| வருமான வரி செலவினங்கள் | (78,589,031) | (36.3) | முன்னைய ஆண்டில் மேலதிக வருமான வரி ஏற்பாடு இனங்காணப்பட்டதன் காரணமாக வரி விகிதத்தை 28 சதவீதத்திலிருந்து 24 சதவீதமாகக் குறைத்ததன் விளைவாக பிரதானமாக நடைமுறை வரி அறவீடுகள் 13.6 சதவீதத்தால் குறைவடைந்ததால் வருமான வரிச் செலவினங்கள் 36.3 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. |
| அக் காலப்பகுதிக்கான நிறுத்தப்பட்ட செயற்பாடுகளிலிருந்தான வரிக்குப் பின்னரான இலாபம் | (34,408,099) | (84.8) | இதற்குக் காரணம் கொலதெனிய ஹைட்ரோபவர் (பிறைவேட்) லிமிட்டட் நிறுத்தப்பட்ட செயற்பாடுகளாக வகைப்படுத்தப்பட்டு 2021 மார்ச் 30 இல் அகற்றப்பட்டது. |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு மீளாய்வாண்டுக்கான கம்பனியின் சில முக்கியமான விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விகிதம்** | **2021** | **2020** |
|---|---|---|
| தேறியலாப விகிதம் (%) | 58 | 46 |
| மொத்த சொத்துக்கள் மீதான திரும்பல் (%) | 15 | 14 |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் (%) | 14 | 11 |
| நடைமுறை விகிதம்<br>(தடவைகளின் எண்ணிக்கை) | 20.7:1 | 14.7:1 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அனைத்து விகிதங்களும் முன்னேற்றமடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (i) | கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் பட்டியலிடுதல் விதிகள் 7.13.1 உடன் இணங்காததன் காரணமாக கம்பனி 2014 மார்ச் 21 இல் அதன் பட்டியலிடுதலை நீக்குதல் செயன்முறையைத் தொடங்கியது. பட்டியலிடுதலை நீக்குதல் செயன்முறையில் நிலவிய சிக்கலான தன்மை மற்றும் பட்டியலிடுதலை நீக்குதலுக்கான பங்குதாரர்களின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள முடியாமை காரணமாக இது ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக தாமதமாகியது. இணங்காமை அறிவிப்பு 2020 யூலை 07 இல் CSE இற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. தற்சமயம் கம்பனி பங்குகளை மீளக் கொள்வனவு செய்வதன் மூலம் கம்பனியை பட்டியலிடுதலிலிருந்து நீக்குவதற்கான நியதிச்சட்ட தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான | 2022 மார்ச் 29 இல் நடைபெற்ற அதிவிசேட பொதுக் கூட்டத்தில் 2001 திசெம்பர் 18 ஆம் திகதிய 1215/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவாறு இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் (SEC) உருவாக்கப்பட்ட விதிகளின் 5 (2) (அ) விதியின் மூலம் வேண்டப்பட்டவாறு கூட்டத்தில் கலந்து கொண்ட பங்குதாரர்களில் எழுபத்தைந்து சதவீதத்திற்கும் (75%) குறையாத பங்குதாரர்கள் பட்டியலிடல் நீக்க தீர்மானத்திற்கு அங்கீகாரம் அளித்தனர். குறித்த விதியின் பிரகாரம் கம்பனி 2022 ஏப்ரல் 08 இல் SEC இற்கு பட்டியலிடல் நீக்க விண்ணப்பத்தை சமர்ப்பித்ததுடன் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு (SEC) அவர்களின் 2022 யூன் 09 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் (CSE) உத்தியோகபூர்வ பட்டியலிலிருந்து புறொப்பட்டி டெவெலப்மென்ட் பிஎல்சீ இன் பங்குகளை பங்கொன்றிற்கு ரூபா 183/- வெளியேறும் சலுகை | கம்பனியின் இலக்கு திகதிகளுக்குள் முழுமையான பட்டியலிடல் நீக்குதல் செயன்முறையை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| | |
|---|---|
| நிர்வாகச் செயற்பாட்டில் உள்ளது. | விலையொன்றில் பட்டியலிலிருந்து நீக்குவதற்கான அவர்களது அங்கீகாரத்தை வழங்கி SEC இன் விதி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பட்டியலிடுதலை நீக்குதல் செயன்முறையில் மிகுதி செயன்முறையை பின்பற்றியிருந்தது.<br><br>அதன் பிரகாரம் கம்பனி பங்குகளை மீள கொள்வனவு செய்யும் வாய்ப்பை வழங்கியதுடன் அது 2022 யூலை 14 முதல் திறக்கப்பட்டு 2022 ஆகஸ்ட் 10 இல் மூடப்பட்டது. சலுகையை ஏற்றுக்கொண்ட பங்குதாரர்களுக்கான கொடுப்பனவுகள் CSE விதிகளின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்பட்டது. 2022 ஒக்தோபர் 12 இல் கொடுப்பனவு உறுதிப்படுத்தல் சான்றுகள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களுடன் CSE இற்கு வெளிப்படுத்தலொன்று மேற்கொள்ளப்பட்டது. கம்பனி பட்டியலிடலை நீக்குவதற்கு CSE இன் அங்கீகாரத்திற்காக காத்திருக்கிறது. மேலும், பங்குகளை மீள கொள்வனவு செய்தல் மற்றும் இரத்து செய்தல் ஆகியவற்றில் படிவம் 9 கம்பனிப் பதிவாளரிடம் (ROC) தாக்கல் செய்யப்பட்டது.<br><br>CSE இடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டவுடன், கம்பனி பட்டியலிடல் நீக்குதல் செயன்முறையை பூர்த்தி செய்வதற்கு பின்வரும் செயற்பாடுகளை பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது.<br><br>• செய்தித்தாள்கள் மற்றும் வர்த்தமானியில் மூன்று மொழிகளிலும் அறிவிப்புக்கள் வெளியிடப்படுதல்.<br><br>• ROC உடன் கூடிய கோவை, படிவம் 39 (பப்ளிக் லிமிட்டட் கம்பனியிலிருந்து லிமிட்டட் கம்பனியாக கம்பனியின் நிலையை மாற்றுதல்) மற்றும் படிவம் 3 (புறொப்பட்டி டெவெலப்மென்ட் பிஎல்சியில் இருந்து புறப்பட்டி டெவெலப்மென்ட் லிமிட்டட் என கம்பனியின் பெயரை மாற்றுதல்) |

- ROC இடமிருந்து புதிய ஒருங்கிணைப்புச் சான்றிதழைப் பெற்றவுடன், மீள்கொள்வனவு சலுகையை ஏற்காத பங்குதாரர்களுக்கு புதிய பங்குச் சான்றிதழ்களை வழங்கவும். புதிய ஒருங்கிணைப்புச் சான்றிதழின் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் இது பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

2022 ஒக்தோபர் 30 அளவில் பட்டியலிடலை நீக்குவதற்கான CSE அங்கீகாரம் கிடைத்தால், 2022 நவம்பர் இறுதியளவில் முழுமையாக பட்டியலிடல் நீக்குதல் செயன்முறையை கம்பனி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

**3.2 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்**

சபை அங்கீகரித்த முக்கிய வேலைத் திட்டங்கள், இலக்குகள் மற்றும் 2021 ஆம் ஆண்டிற்காக கம்பனி ஆற்றிய உண்மையான பணி ஆகியவற்றுக்கு இடையே கணிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டன. விவபங்களுக்கு பின்னிணைப்பு I ஐப் பார்க்கவும்.

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**கணக்காய்வு விடயம்**

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் சபையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரிற்கும் உள்ளபடியான பதவியணியினரிற்கும் இடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. தற்போதுள்ள வெற்றிடங்களுக்கு சம்பந்தப்பட்ட நபர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு கம்பனியால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | 2021.12.31 இல் உள்ளவாறான பதவியணியினர் | வேறுபாடு |
|---|---|---|---|
| நிறைவேற்று பதவியணியினர் | 15 | 13 | 02 |
| பராமரிப்பு பிரிவு | 61 | 51 | 10 |
| நிதி பிரிவு | 18 | 16 | 02 |
| HR & நிர்வாகப் பிரிவு | 16 | 13 | 03 |
| பெறுகை பிரிவு | 03 | - | 03 |
| **மொத்தம்** | **113** | **93** | **20** |

**முகாமைத்துவ கருத்துரை**

**நிறைவேற்று பதவியணியினர்**

BOC இற்கு தடையில்லா சேவைகளை வழங்குவதற்கு இன்றியமையாத நிறைவேற்றுநர்களின் குறைந்தபட்ச தேவைப்பாட்டை மாத்திரமே PDL தற்போது பேணுகிறது.

காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் தேவைப் பகுப்பாய்வின் அடிப்படையில் தேவைப்படும் போது, இரண்டு நிறைவேற்று தர வெற்றிடங்களை நிரப்புவதற்கு முகாமைத்துவம் விரும்புகிறது.

**நிறைவேற்றுத்தரமல்லாத பதவியணியினர்**
**பராமரிப்பு பிரிவு**

2021 பெப்ரவரி, ஏப்ரல், யூலை, ஆகஸ்ட் மற்றும் ஒக்தோபர் மற்றும் 2022 ஏப்ரல் மற்றும் ஒக்தோபர் மாதங்களில் செய்தித்தாள் விளம்பரங்கள் மூலம் வெற்றிடங்களை

**பரிந்துரை**

ஏற்கனவே உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மீளாய்வாண்டில் பின்வரும் ஊழியர்களின் அசைவுகள் மேலும் அவதானிக்கப்பட்டன.

| **விபரம்** | **ஊழியர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| 2020.12.31 இல் உள்ளவாறான பதவியணியினர் | **99** |
| 60 வயதில் ஓய்வு பெற்றமை | (6) |
| 55 வயதில் ஓய்வு பெற்றமை | (2) |
| இராஜினாமா செய்தமை | (4) |
| | **87** |
| புதிதாக சேர்த்தமை | 4 |
| மீண்டும் சேர்த்தமை | 2 |
| **2021.12.31 இல் உள்ளவாறான பதவியணியினர்** | **93** |

2021 ஆம் ஆண்டில் தொழிலாளர் புரள்வு விகிதம் 12.5 சதவீதமாக காணப்பட்டது.

நிரப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பெரும்பாலான சமயங்களில் விண்ணப்பதாரர்கள் தேவைப்பாட்டிற்கு ஏற்ப பொருந்தாததால் முயற்சிகள் தோல்வியடைந்தன. அச்சமயங்களில் தெரிவுசெய்யப்பட்ட சில விண்ணப்பதாரர்களின் எதிர்பார்ப்புக்களை எதிர்வுகூறப்பட்ட சம்பளம் பூர்த்தி செய்யவில்லை. மேலும், தற்போது வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக ஊழியர்கள் கம்பனியை விட்டு வெளியேறுகின்றமை அவதானிக்கப்பட்டது. பத்திரிகை விளம்பரத்திற்கு பதில், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது சில விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. எனினும், குறிப்பிட்ட சில வெற்றிடங்களை உள்ளக பதவி உயர்வு மூலம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**<u>நிதிப் பிரிவு</u>**

காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் தேவைப் பகுப்பாய்வின் அடிப்படையில் தேவைக்கேற்ப வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**<u>HR & நிர்வாக பிரிவு</u>**

காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் தேவைப் பகுப்பாய்வின் அடிப்படையில் தேவைக்கேற்ப வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பின்னிணைப்பு I

| செயற்திட்டத்தின் பெயர் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த பாதீடு (ரூபா. மில்லியன்) | கால இலக்குகள் | | | தொடங்கும் உண்மையான திகதி | விலகல்கள் | முகாமைத்துவ கருத்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| | | வேலை தொடங்கும் ஆரம்ப திகதி | எதிர்பார்க்கப் படும வேலை பூர்த்தியடையும் ஆரம்ப திகதி | கணிசமான மதிப்பிடப்பட்ட வேலை பூர்த்தியடைதல் திகதி | | | |
| AHUs, மத்திய கட்டுப்பாட்டு மற்றும் கண்காணிப்பு முறைமையின் மோட்டார் பொருத்தப்பட்ட (Motorized) வால்வுகளை வழங்கி நிறுவுதல். | 28 | 2020 ஒக்தோபர் 22 | 2021 மே 20 | 2022 செப்தெம்பர் 30 | 2021 நவம்பர் 02 | ஆரம்ப எதிர்பார்க்கப்பட்ட திகதிக்கும் கணிசமான மதிப்பிடப்பட்ட வேலை பூர்த்தி செய்தல் திகதிக்கும் இடையே 499 நாட்கள் தாமதம் காணப்பட்டது.<br>ரூபா 10.411 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டு பணிகள் தற்போதும் நடைபெற்று வருகின்றன. | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக, கீழே குறிப்பிட்டவாறு BOC தலைமையக கட்டிடத்தில் வெளி ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட நிர்மாண/ புனரமைப்பு பணிகளை இடைநிறுத்துவதற்கு இலங்கை வங்கியின் முகாமைத்துவம் தீர்மானித்திருந்தது.<br>(i) இரண்டாவது அலை - 2020/10/25 முதல் 2021/04/06 வரை<br>(ii) மூன்றாவது அலை - 2021/04/28 முதல் 2021/08/02 வரை<br>மேற்படி பணி இடைநிறுத்தப்பட்டதாலும், நோஸ்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் பதவியணியினரிடையே கொவிட்-19 பரவியதாலும், செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டது. |
| மாடி 17 முதல் கூரை வரை மின்தேக்கி நீர் குழாய் | 3 | 2021 திசெம்பர் | - | - | - | செயற்திட்டம் 2024 இற்கு ஒத்திவைக்கப்பட்டது. | செயற்திட்டத்தை 2024 இற்கு ஒத்திவைப்பதற்கு முகாமைத்துவம் தீர்மானித்தது. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முறைமைகளை மாற்றுதல் | | | | | | | |
| 17வது மாடியில் புதிய காற்று விநியோக மின்விசிறிகளை வழங்கி நிறுவுதல் | 3.5 | 2021 யூலை 30 | 2021 நவம்பர் 27 | 2022 சனவரி 15 | 2021 திசெம்பர் 20 | ஆரம்ப எதிர்பார்க்கப்பட்ட திகதிக்கும் கணிசமான மதிப்பிடப்பட்ட வேலை பூர்த்தி செய்தல் திகதிக்கும் இடையே 143 நாட்கள் தாமதம் அவதானிக்கப்பட்டது.<br>மொத்த பாதீட்டில் ரூபா 2.8 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. | ஸ்பெயினில் உள்ள "S & P" தொழிற்சாலையில் புதிய காற்று விநியோக மின்விசிறியை தயாரிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்தல் தாமதமாகியிருந்தது. |
| புதிய காத்திருப்பு AHU அலகுகின் கொள்வனவு | 3 | - | - | - | - | காத்திருப்பு AHU அலகு கொள்வனவு இரத்து செய்யப்பட்டது. | காத்திருப்பு AHU அலகு கொள்வனவை இரத்து செய்வதற்கு முகாமைத்துவம் தீர்மானித்தது. |
| அலுமினிய கலவை panel Ceiling உடன் கூடிய 1 & 3 மாடிகளில் Timer Ceiling ஐ மாற்றுதல் | 8 | 2020 ஒக்தோபர் 13 | 2021 பெப்ரவரி 10 | 2022 மார்ச் 31 | 2021 ஆகஸ்ட் 02 | ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட திகதிக்கும் கணிசமான மதிப்பிடப்பட்ட வேலை பூர்த்தி செய்தல் திகதிக்கும் இடையே 294 நாட்கள் தாமதம் அவதானிக்கப்பட்டது.<br><br>செயற்திட்டம் உண்மையில் தொடங்கப்பட்டும் போது அது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட வேலை பூர்த்தி செய்தல் திகதியை கடந்திருந்திருந்தது. | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக, கீழே குறிப்பிட்டவாறு BOC தலைமையக கட்டிடத்தில் வெளி ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட நிர்மாண/ புனரமைப்பு பணிகளை இடைநிறுத்துவதற்கு இலங்கை வங்கியின் முகாமைத்துவம் தீர்மானித்திருந்தது.<br><br>(i) இரண்டாவது அலை - 2020/10/25 முதல் 2021/04/06 வரை<br>(ii) மூன்றாவது அலை - 2021/04/28 முதல் 2021/08/02 வரை<br><br>மேற்படி பணி இடைநிறுத்தப்பட்டதாலும், சந்தையில் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | மொத்த பாதீட்டில் ரூபா 1.9 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. | அலுமினிய கலவை panels போன்ற நிர்மாண மூலப்பொருட்கள் தட்டுப்பாடு காரணமாகவும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டது. |
| தளங்கள் 1 & 2 இல் உள்ள Life Lobbies இற்கான புதுப்பித்தல் | 8 | 2020 மார்ச் 20 | 2020 செப்தெம்பர் 16 | 2022 செப்தெம்பர் 14 | 2021 ஆகஸ்ட் 02 | ஆரம்ப எதிர்பார்க்கப்பட்ட திகதிக்கும் கணிசமான மதிப்பிடப்பட்ட வேலை பூர்த்திசெய்தல் திகதிக்கும் இடையே 499 நாட்கள் தாமதம் அவதானிக்கப்பட்டது.<br><br>செயற்திட்டம் உண்மையில் தொடங்கப்படும் போது அது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட வேலை பூர்த்தி செய்தல் திகதியை கடந்திருந்தது.<br><br>மொத்த பாதீட்டில் ரூபா 0.5 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக, கீழே குறிப்பிட்டவாறு BOC HQ கட்டிடத்தில் வெளி ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட நிர்மாண/ புனரமைப்பு பணிகளை இடைநிறுத்துவதற்கு இலங்கை வங்கியின் முகாமைத்துவம் தீர்மானித்திருந்தது.<br><br>(i) முதலாவது அலை - 2020/03/20 முதல் 2020/09/07 வரை<br>(ii) இரண்டாவது அலை - 2020/10/25 முதல் 2021/04/06 வரை<br>(iii) மூன்றாவது அலை - 2021/04/28 முதல் 2021/08/02 வரை<br><br>மேற்படி பணி இடைநிறுத்தப்பட்டதாலும், சுவர் ஓடுகள் போன்ற நிர்மாண மூலப்பொருட்கள் தட்டுப்பாடு காரணமாகவும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டது. |
| அடித்தளம் 2 & 3 இல் உள்ள மைய பிரதான மலசலகூடங்கள் மற்றும் 30வது மாடியில் உள்ள வெளிப்புற | 4.5 | 2021 சனவரி 15 | 2021 யூலை 14 | 2023 மார்ச் 31 | 1. இன்னும் தொடங்க வேண்டும்.<br>2. ஒப்பந்ததாரர் தேவையான ஓடுகளுக்கு கட்டளை | கணக்காய்வு திகதியான 2022 ஒக்தோபர் 06 வரை செயற்திட்டம் தாமதமாகியது. | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக, கீழே குறிப்பிட்டவாறு BOC HQ கட்டிடத்தில் வெளி ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட நிர்மாண/ புனரமைப்பு பணிகளை இடைநிறுத்துவதற்கு இலங்கை வங்கியின் முகாமைத்துவம் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பிரதான மலசலகூடங்களை மேம்படுத்துதல்/ நவீனமயப்படுத்துதல் | | | | | இட்டுள்ளார்<br>3. சுகாதாரப் பொருத்துதல் 2022/01/13 இல் தளத்தில் வழங்கப்பட்டது. | | தீர்மானித்திருந்தது.<br>(i) இரண்டாவது அலை - 2020/10/25 முதல் 2021/04/06 வரை<br>(ii) மூன்றாவது அலை - 2021/04/28 முதல் 2021/08/02 வரை<br>மேற்படி பணி இடைநிறுத்தப்பட்டதாலும், சந்தையில் தரை மற்றும் சுவர் டைல்கள் தட்டுப்பாடு காரணமாகவும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டது. |
| அடித்தளம் 2 இல் இருந்து 17வது தளத்திற்கு 11 KV மின் கேபிள்களை மாற்றுதல் & 17வது மாடியில் 11 KV Isolator panel ஐ மாற்றுதல் | 7 | - | - | - | - | செயற்திட்டம் 2022 இற்கு ஒத்திவைக்கப்பட்டதுடன் தொடங்கும் திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. | 2022 ஏப்ரல் 01 இல் மினெல் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது.<br>வெளிநாட்டு நாணய தட்டுப்பாடு காரணமாக தேவையான கேபிள்கள் மற்றும் Ring Main அலகை இறக்குமதி செய்வதற்கான நாணய கடிதங்களை ஏற்படுத்துதல் தாமதமாகியது. |
| அடித்தளம் 2 மற்றும் 17வது மாடியில் உள்ள LV Switchgear panels ஐ மாற்றுதல்/ புதுப்பித்தல் | 6 | - | - | - | - | செயற்திட்டம் 2023 இற்கு ஒத்திவைக்கப்பட்டது. | செயற்திட்டத்தை 2023 இற்கு ஒத்திவைப்பதற்கு முகாமைத்துவம் தீர்மானித்தது. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தீ கண்டறிதல் மற்றும் பாதுகாப்பு முறைமை | 58 | 2020 ஆகஸ்ட் 17 | 2021 யூலை 12 | 2022 ஒக்தோபர் 15 | 2020 செப்தெம்பர் 14 | ஆரம்ப எதிர்பார்க்கப்பட்ட திகதிக்கும் கணிசமான மதிப்பிடப்பட்ட வேலை பூர்த்தி செய்தல் திகதிக்கும் இடையே 460 நாட்கள் தாமதம் அவதானிக்கப்பட்டது.<br><br>மொத்த பாதீட்டில் ரூபா 20.982 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக, கீழே குறிப்பிட்டவாறு BOC HQ கட்டிடத்தில் வெளி ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட நிர்மாண/ புனரமைப்பு பணிகளை இடைநிறுத்துவதற்கு இலங்கை வங்கியின் முகாமைத்துவம் தீர்மானித்திருந்தது.<br><br>(i) முதலாவது அலை - 2020/03/20 முதல் 2020/09/07 வரை<br>(ii) இரண்டாவது அலை - 2020/10/25 முதல் 2021/04/06 வரை<br>(iii) மூன்றாவது அலை - 2021/04/28 முதல் 2021/08/02 வரை<br><br>மேற்படி பணி இடைநிறுத்தப்பட்டதாலும், இரவு நேரத்தில் கட்டிடத்தில் உள்ள அலுவலகப் பகுதிகளுக்கு செல்வதில் சிக்கல் ஏற்பட்டதாலும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டது. |